தொழிலாளர் சங்கம் அல்ல. அது அதில் நியாயம் பண்ண வேண்டும் என்றுதான் கேட்டது. திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டது சரியல்ல. ஆகவே அந்தத், தொழிலாளர்கள் இன்றைக்கும் வேலை இல்லாமல்—மின்வாரியத் தலைவரின் தவறினாலே—இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கத்திற்கு நன்றி.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மின்வாரியம் செய்து இருக்கும்படிவான தவறுக்கு, அந்த தவறைத் திருத்தும் பணியைச் செய்யாமல் இருப்பதை அரசு முன் வந்து செயல்படுத்துமா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர் ஒரு சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அதற்கு அவர் விளக்கம் சொன்னார். ஆகையினாலே மன்றத்திற்கு வேண்டிய தகவல் கிடைத்து விட்டது என்பதால்தான் தன்னிலை விளக்கத்திற்கு நன்றி என்று சொன்னேனே தவிர வேறல்ல. குறைபாடுகள் இருந்தால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல அவை நிவர்த்தி செய்யப்படும்.

தூத்துக்குடியிலுள்ள டான்சி நிறுவனம்.

* வினா எண் 43—திரு. மு. அப்பாதுரை, திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்—மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள டான்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு?
(இ) அங்கு எவ்வளவு பேர் பணிபுரிகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தூத்துக்குடி டான்சி நிறுவனத்தில்—

(அ) உற்பத்தி செய்யப்	1979-80—ல் ரூ. 18.33 இலட்சம்
பட்ட பொருள்களின் மதிப்பு	1980–81—ல் ரூ. 20.26 இலட்சம்
	1981-82—ல் ரூ. 26.57 இலட்சம்

(அ) அடைந்த இலாபம்: 1979-80—ல் ரூ. 0.73 இலட்சம்
1980-81—ல் ரூ. 2.85 இலட்சம்
1981-82—ல் ரூ. 1.28 இலட்சம்
(தோராயம்)

(இ) 52 பேர்கள் பணிபுரிகிறார்கள்.

(முற்பகல் 9–10)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டான்சி நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்த ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் இல்லை,

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றதா? அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டதனால் நமக்கு கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. உள்நாட்டின் தேவைகளுக்குத்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டான்சியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள். கொஞ்சம் விலை அதிகமாக இருக்கிறது எனச் சொல்லுகிறார்கள். விலையைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா? மேலும் இதற்குத் தேவையான மூலப்பொருள்கள் தனியார்களிடமிருந்துதான் வாங்கப்படுகிறதா? அது எப்படி கொள்முதல் செய்யப்படுகிறது? அந்த அடக்கவிலையைக் குறைத்து, லாபத்தைக் குறைத்து தரமான பொருள்கள் குறைந்த விலையில் பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டான்சி நிறுவனம் லாபத்தில்தான் இயங்கிக்கொண்டு வருகிறது. அடக்க விலையைக் குறைப்பதற்கு முயற்சிகளை எடுக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தில் செய்யப்படுகின்ற பொருள்களை அரசின் பல்வேறு இலாக்காக்களில் வாங்காமல், தனியாரிடத்திலே வாங்குவதால் டான்சியின் விற்பனை பாதிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்களே அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? மற்ற அரசு நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான பொருள்களை டான்சி நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கான முயற்சிகளை எடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மற்ற அரசு நிறுவனங்களும் டான்சியிலே செய்யப்படுகின்ற பொருள்களைத்தான் வாங்குகிறார்கள். இதுபற்றி ஏதாவது குறிப்பிட்ட தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தில் மக்களுக்கு மிகமிகத் தேவையான, அதாவது போர்வெல்லுக்குத் தேவைப்படுகின்ற பைப்புகள் அதிகமாகத் தேவைப்படுகின்றதால், டான்சி நிறுவனம் குறித்த காலத்தில் செய்துதரமுடியாத நிலை ஏற்படுகிறது. அதற்கு ஏதாவது துரிதப்படுத்துவதற்கு டான்சி நிறுவனம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் என்னிடத்திலே இல்லை. அப்படி தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தூத்துக்குடி-கொழும்பு இடையே பயணிகள் கப்பல் விடும் திட்டம்

*வினா எண் 56—

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி—கொழும்பு இடையே மீண்டும் பயணிகளுக்கான கப்பல் சர்வீசை துவக்க வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) மததிய அரசு எபபொழுது துவககப்படுமென தெரிவித்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.